மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk



# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 38

- நம் வாழ்க்கையின் புயல்கள்
- சுவிசேஷம்
- தேவ ஏவுதலினால் அருளப்பட்ட வேதாகமம்
- என்னத்தை உண்போம் - விடுதலை ஆண்டு தரும் பாடங்கள்
- ஆபிரகாம் பெற்ற தேவ வாக்குத்தத்தங்கள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# நம் வாழ்க்கையின் புயல்கள்

துடுப்பு இல்லாத படகு ஒன்று சிற்றாறு ஒன்றின் வேகத்தில் தத்தளிப்பது பற்றி நாமெல்லாருமே கேட்டிருக்கிறோம். சங்கடமான ஒரு சூழ்நிலையினின்று நம்மை விடுவித்துக் கொள்ள எவ்வித ஆதாரங்களும் இல்லாத ஒரு நிலையை அது காட்டுகிறது. துடுப்பு இருந்தால் மட்டும் போதாது; அதைப் பயன்படுத்த வேண்டும், இலக்கை அடைவதற்கு அதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் வாழ்க்கையை ஒரு படகு சவாரி என்றும், உங்கள் தீர்மானங்களையும் செயல்களையும் தண்டுவலித்தல் என்றும் எண்ணிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முடிவெடுக்கும் போதும், ஒவ்வொரு செயலின் போதும் நீங்கள் தண்டுவலித்து இலக்கை நோக்கி செல்லுகிறீர்கள். நீங்கள் திருமணமானவரென்றால், உங்கள் வாழ்க்கைத் துணையும் உங்களுடன் படகில் பயணிப்பதாகக் கற்பனை செய்யுங்கள்.



இருவருமாகச் சேர்ந்து தண்டுவலித்தால் முனேற்றம் காண்பீர் கள். அல்லது உங்களில் ஒருவர் எதிர்த்திசை நோக்கித் தண்டு வலித்தால், படகு தத்தளிக்கும் அல்லது சுற்றிச்சுற்றி வரும்.

உங்கள் சகோதர சகோதரிகள் படகில் உங்களோடு இருப்பதாக நினைத்துக் கொள்ளுங் கள். எல்லாரும் சேர்ந்து தண்டுவலிப்பதால் சேரவேண்டிய இடத்தை வேகமாகச் சென்றடைய முடியும். ஆனால் படகில் உள்ள ஒவ்வொருவருமே தன் மனம் போனபடி செயலாற்றினால், படகு எந்த முன்னேற்றமும் இல்லாமல் அப்படியே நிற்கும், அல்லது மூழ்கிப் போய்விடும்.

நம்மோடு படகில் இருப்பவர்கள் ஒத்த மனதுடையவர்களாய்த் தண்டு வலிப்பது, எவ்வளவு முக்கியம். அப்பொழுது தான் படகு சரியான திசையில் செல்லும். அவர்கள் எடுக்கும் முடிவுகளும் செயல்களும் ஒத்திசைந்தனவாய் இருக்கும். ஏனெனில் அனைவரின் இலக்குகளும்

ஒன்றே தான். ஒரே நேரத்தில் நாம் இரண்டு துறைமுகங்களை நோக்கித் தண்டுவலிக்க முடியாது.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக"

எனப் பவுல் கூறினார். இவ்வறிவுரை, படகில் சவாரி செய்பவர்களுக்கும் பொருந்தும். நம்முடைய தீர்மானங்கள் செயல்களுக்கு முற்றிலும் மாறுபட்டு செயல்படுவோரோடு சேர்ந்து நாம் ஒரே படகில் பயணிக்கக்கூடாது. நாம் தேவனுடைய ராஜ்யத்தை நோக்கிச் செல்கிறோம் என்பது குறித்து நம் மனதில் தெளிவான நிச்சயத்தோடு, அத்தகைய இலக்கை கொண்டுள்ள கூட்டாளிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் புயல்கள் வரப்போவது நிச்சயம். ஒரு சிறிய படகிலே ஆண்டவர் இயேசு ஆழ்ந்த நித்திரையில் இருந்தபொழுது அப்படகிலிருந்த சீஷர்கள், கொந்தளிக்கும் கடலிலே கரையை நோக்கி, மும்முரமாய்த் தண்டுவலித்துக் கொண்டிருந்தனர். ஆயினும், எவ்வித பலனும் இல்லாமற் போயிற்று. ஆகவே அவர்கள் "ஐயரே, நாங்கள் மடிந்து போகிறோம்," என்று அவரை எழுப்பினார்கள். கிறிஸ்துவின் வார்த்தைகள் உடனே நிம்மதியைக் கொண்டு வந்தன. சுழல்காற்று நின்றது; அலைகள் அமர்ந்தன.

இன்னொரு சந்தர்ப்பத்தில், மாலைப் பொழுதில் இயேசு கரையிலே தனிமையா யிருந்தார். படகு நடுக்கடலிலே இருந்தது. சீஷர்கள் மிகவும் சிரமப்பட்டுத் தண்டு வலித்ததைக் கண்டார்; ஏனென்றால் எதிர் காற்றாயிருந்தபடியால் படகு அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, சீஷர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின்மேல் நடக்கிறதைக் கண்ட சீஷர்கள் அவரை ஒரு ஆவி என்றெண்ணி, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களுடன் பேசி: "திடன்கொள்ளுங்கள்; நான்தான், பயப்படாதிருங்கள்" என்றார். அவர் படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். வாழ்க்கைபிரச்சினை களின் ஊடாக நாம் தட்டுத்தடுமாறிச் செல்கையில், அவருடைய பலத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அப்பொழுது நாம் உற்சாகமாக "கிறிஸ்து நம் படகில் இருக்கும்போது, நாம் புயலைப் பார்த்து பயப்படோம்" எனப் பாடலாம்.

நம்மை நாமே கேட்க வேண்டிய பெரிய கேள்வி என்னவெனில், "கிறிஸ்து நம் படகில் உள்ளாரா?" என்பதுதான். சரியான திசையில்



படகைத் தண்டுவலித்துச் செல்கிறோமா? படகிலுள்ளவர்கள் நம்முடன் ஒரே மனதுடையவர்களாய் இருக்கிறார்களா? நம் தண்டுவலிப்புகளாகிய தீர்மானங்களும் செயல்களும் நம்மைச் சரியான திசையில் கொண்டு செல்கின்றனவா? தவறான திசையில் செல்லும் லோகாதாயப் படகுகளில் நாம் ஏறியிருப்போமாயின் நம் செயல்களும் தீர்மானங்களும் சரியாயிருக்கமாட்டா. நாமும் நம் நண்பர்களும் இவ்வாழ்க்கை தரும் இன்பங்களில் அதிக நாட்டம் கொண்டால், வாழ்க்கை படகு சரியான திசையில் செல்லாது.

யோனா தவறான முடிவுகளை எடுத்து, தவறாகவே நடந்துகொண்டான். யோனா கர்த்தரை விட்டு ஓடி, தர்ஷீசுக்கு நேராகப் போனான். அவன் முதலில் யோப்பாவுக்குப் போனான்; அங்கே ஒரு கப்பலைக் கண்டு, பணம் கொடுத்து, கப்பலில் ஏறி, தேவனுடைய வேலையைச் செய்வதைவிட்டு ஓடினான். அப்பொழுது அவன் ஒரு ஆபத்தில் மாட்டிக் கொண்டான். யோனாவைப் போலவே, நாமும் தேவனுடைய பார்வையிலிருந்தும் அவரிடம் நமக்கிருக்கும் பொறுப்பிலிருந்தும் மறைவாகச் சென்றுவிட நமக்கு எந்த இடமும் கிடையாது. யோனாவுடைய உயிரும் போய்விடும் என்னுமளவிற்கு, தேவன் ஒரு புயலை அனுப்பினார். தவறான திசையில் போய்க் கொண்டிருந்த கப்பலிலிருந்து பிரித்துக் கொண்டு, தேவனுடைய இரக்கத்திடம் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்த பின்னர் தான், தேவன் அவனைக் காப்பாற்றி, சரியான பாதைக்குத் திசை திருப்ப முடிந்தது.

சிலசமயங்களில் நாமும்கூட தவறான முடிவுகளை எடுத்து, தவறான மக்க ளோடு சேர்ந்து, தவறான இலக்கு நோக்கிப் பயணித்திருக்கிறோம். யோனா முரட்டாட்டம் பண்ணியிருந்தும், நல்லவேளை தேவன் யோனாமீது அக்கறை கொண்டு அவனைத் திருப்பிக் கொண்டு வந்தார். வாழ்க்கைக் கடலில் பயணிக்கையில், நாம் எடுத்த தவறான முடிவுகளுக்காக தேவன் நம்மிடத்தில் இரக்கமாயிருக்கும்படி, நாம் ஜெபம் செய்வோமாக.

நாம் கற்றுக்கொண்டு, நினைவில் வைத்துக்கொள்ள விரும்பும் பாடம் என்னவென்றால், நாமே சொந்தமாக முடிவுகள் எடுத்து, நாமே நமது சொந்தத் திட்டங்களை தீட்டும்போது, நம்முடைய தெரிந்துகொள்ளுதல்களில் தேவன் பிரியப்படாவிடினும் அச்செயல்களை நாம் செய்யும்படியாக விட்டுவிடுவார். அவர் நம்மை நேசிக்கிறபடியால், அவர் ஒரு புயலை அனுப்பி, நம் வழிகளி லுள்ள தவறை நாம் காணும்படியாக உதவுவார். அலை மோதிக் கொந்தளிக்கும் அலைகளுக்கு அப்பால் ஆண்டவர் இயேசு கடல்மீது நடந்து வருவதை நாம் காணவேண்டும். நம் துன்பத்தில் நாம் அவரை நோக்கிக் கதறிக்

கூப்பிடாவிடில் அவர் நம்மைக் கடந்து போகிறவர்போல காணப்படு வார்.

உங்கள் படகில் கூடப் பயணஞ் செய்பவர்களைக் கவனமாக தேர்ந்தெடுங்கள். அவர்களெல்லாருமே உங்கள் இலக்கை உடையவர்களாய், ஒரே துறைமுகம் நோக்கிப் பயணிக்க விரும்புகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அப்பொழுது நாம் தண்டு வலித்துக் கொண்டே,

*"அருள்நாதர் மீதில் சார்ந்து சுகிப்பேன்;*

*நித்தம் இளைப்பாறல் பெற்று வாழுவேன்"*

எனப் பாடமுடியும்.

*ராபர்ட் ஜே. லாய்ட்*

# சுவிசேஷம்

*நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட் சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படு வான்"* (மாற்கு 16:15,16).

*"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்."* (அப்போஸ்தலர் 8:12).

*"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் (பவுல்) வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது."* (ரோமர் 1:16).

*"மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்கு கிறாரென்று வேதம் முன்னதாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமிற்குச் சுவிசேஷமாய் முன்னறி வித்தது."* (கலாத்தியர் 3:8).

"சுவிசேஷம்" எனும் வார்த்தையின் பொருள் நற்செய்தி" என்பது. கிரேக்க வார்த்தையான இவன்ஜெலியோன் (Evangelion) புதியஏற்பாட்டில் 101 தடவை இடம் பெறுகிறது. சுவிசேஷம் என்பது புதிய ஏற்பாட்டு வார்த்தை என்றாலும், அதன் பூர்வமானது பழைய



ஏற்பாட்டில் உறுதியாய் வேரூன்றியுள்ளது. கலாத்தியர் 3:8 கூறுவது போல், "இயேசு பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன்னர் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவாலும் அவருடைய சீஷர்களாலும் பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியைப் புரிந்துகொள்ள, ரோம சாம்ராஜ்யத்திற்குள் பவுல் எடுத்துச் சென்ற நற்செய்தியைப் புரிந்துகொள்ளவேண்டும். இன்று நாம் பெறும் நற்செய்தியைப் புரிந்துகொள்ள, அதனுடைய ஆரம்பம், அது எந்த காலம் தோன்றியது எனும் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆம், அப்போஸ்தலனாகிய பேதுருவும் தான் பிரசங்கித்த சுவிசேஷம் "உலகத் தோற்றமுதல் பிரசங்கிக்கப்பட்டு வந்தது" (அப்போஸ்தலர் 3:21). எனக் கூறுகி றார்.

மேலே கூறிய நான்கு வேதபகுதிகளும் சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவாக நம்முன் வைத்து,

1. சுவிசேஷத்தை விசுவாசிப்பது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.
2. சுவிசேஷத்தை மதியாமலிருப்பது, ஆக்கினையைக் கொண்டு வருகிறது.
3. சுவிசேஷ செய்தி தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் தரும் தகவல்.
4. சுவிசேஷத்தை விசுவாசித்தால், திருமுழுக்கும் அதைத் தொடர்ந்து எடுக்கவேண்டும்.
5. இரட்சிப்பின் நம்பிக்கை எல்லா ஆண்கள் பெண்களுக்கும், எல்லா ஜாதி மக்களுக்கும் (தேசத்தாருக்கும்) கிடைக்கும்.
6. இயேசுவின் மூலமாக இரட்சிப்பைக் கொண்டுவரும் தமது நோக்கத் தைத் தேவன் நிறைவேற்றுவார் எனும் விசுவாசம் (நம்பிக்கை) சுவிசேஷ செய்தியைக் கேட்பதன் மூலமாக வருகிறது.
7. 4,000ஆண்டுகளுக்குமுன் ஆபிரகாம் விசுவாசித்த அதே சுவிசேஷத் தைத் தான் நாம் இன்று பெறுகிறோம்.

### பழைய, புதிய ஏற்பாடுகளில் சுவிசேஷம்

அப்போஸ்தலனாகிய பவுல் தனது ஊழியத்தைத் தொடங்கும் முன்னரே சுவிசேஷ செய்தி இருந்து வந்ததைத் தனது எழுத்துக்களில் தெளிவாகக் காட்டுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிறக்கு முன்னரே அது குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் பேசப்பட்டு வந்தது, வனாந்தரத்திலே இஸ்ரவேல்புத்திரருக்கு பிரசங்கிக்கப்பட்டது. ஆபிரகாம் அதை விசுவாசித்து, செயலில் காண்பித்தான். (ரோமர் 1:1,2; 2.தீமோத்தேயு 3:15; எபிரேயர் 4:2; கலாத்தியர் 3:6-9).

புதியஏற்பாடு இந்த சுவிசேஷத்தை 'இஸ்ரவேலின் நம்பிக்கை' என விவரிக்கிறது. பவுலும் இந்த சுவிசேஷத்தை விசுவாசித்த எல்லாருமே தங்கள் விசுவாசமானது, ஆபிரகாம் மற்றும் பண்டைய இஸ்ரவேலின் உத்தமமான ஆண்கள் பெண்களின் விசுவாசத்திற்கு ஒத்தது என அறிக்கையிட்டார்கள். (அப்போஸ்தலர் 26:6,7; 28:20; ரோமர் 4:11; கலாத்தியர் 3:29).

*"பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கு, புற ஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்."* (ரோமர் 15:8,9). என்பது இயேசுவின் பிதாவான தேவன் ஆபிரகாமுக்கும் இஸ்ர வேலுக்கும் அளித்த வாக்குத்தத்தங்களை கிறிஸ்து இயேசுவின் மூலம் நிறைவேற்றுவதோடு, எல்லா ஆண் பெண்களும் அவருடைய ராஜ்யத்தில் நித்தியஜீவனைப் பெறும்படி இரட்சிப்பின் வழியைத் திறந்து வைக்கிறார். (அப்போஸ்தலர் 13:32-39). எனக் காட்டுகிறது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்பது ஒரு உடல்சார்ந்த அநுபவம். இது குறித்த நம்பிக்கை தேவனுடைய வாக்குத்தத்தங்களில் அடங்கியுள்ளது. விசுவாசம் மெய்யான சுவிசேஷத்தின் மையப்பகுதியாய் (இருதயமாய்) இருக்கிறது. (1.கொரிந்தியர் 15:20-26; சங்கீதம் 71:20,21; ஏசாயா 26:19; யோவான் 11:21-27). எபிரெயர் 11:13-19 கூறுவதுபோல, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவது குறித்து ஆபிரகாமுக்கு விசுவாசம் இருந்தது. அவன் வாழ்க்கையில் நடந்த இரு சம்பவங்கள் இதை நிரூபிக்கிறன்றன. "(தேசத்தைச்) சுதந்தரித்துக் கொள்வேன் என்று எதினால் அறிவேன்" என்று ஆதியாகமம் 15:8-ல் கேட்கிறான். அவன் "நல்ல முதிர்வயதிலே மரித்தாலும்" அவனுக்கு ஒரு நித்திய சுதந்தரத்தைத் தரப்போவதாக தேவன் அவனோடு உடன்படிக்கை பண்ணுகிறார் (வச. 15,18) ஆதியாகமம் 22-ல் ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட ஆயத்தமானதையும், அச்செயலின் மூலம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு என்பதை நிரூபித்ததையும் குறித்த வரலாறே தெரிவிக்கிறது (எபிரெயர் 11:19).

## ராஜ்யத்தைப் பற்றியவைகள்

பிலிப்பு சமாரியாவிலுள்ள மக்களுக்குப் பிரசங்கித்தபோது, :இராஜ்யத்துக்கு ஏற்றவைகள்" முக்கியமான பகுதியாக இருந்தன. (அப்போஸ்தலர் 8:12). அவர்கள் திருமுழுக்கு பெறுமுன், ராஜ்யத்தைப்பற்றி அறிந்து கொள்வதோடு, புரிந்து கொள்ளவும் வேண்டும். ஆபிரகாம் விசுவாசித்ததும், எதிர்நோக்கியிருந்ததும், அவனுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களில் விவரிக்கப்பட்டதும் இந்த ராஜ்யம்தான். (ஆதியாகமம் 12:1-3; ஆதியாகமம் 13:14-17; ஆதியாகமம் 15). ரோமர் 4:13-ல்





பார்க்கிறபடி ஆபிரகாம், ராஜ்யம் பூமியிலே வரும் என்று எதிர்பார்த்தான்:. *"உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது".* முதலாம் இரத்த சாட்சியான ஸ்தேவான், பூமிக்கடுத்த ராஜ்யத்தைக் குறித்து தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காக ஆபிரகாம் இன்னும் காத்துக் கொண்டிருப்பதாகக் காட்டுகிறான்: *"இதிலே ஒரு அடி நிலைத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில்,... உனக்கு... இதைச் சுதந்தரமாகத் தருவேன்"* என்று வாக்குத்தத்தம் பண்ணினார். (அப்போஸ்தலர் 7:5) எபிரெயர் 11:39,40 வரப்போகும் ஒரு காலத்தில் உண்மையும் உத்தமுமான விசுவாசிகளுடனே சேர்ந்து ஆபிரகாம் இந்த பூமிக்கடுத்த ராஜ்யத்தைச் சுதந்தரிப்பான் என உறுதியளிக்கிறது.

இயேசுவானவர்... எங்கும் சுற்றி நடந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். சீஷர்களும் அவ்வாறே செய்தார்கள். (மத்தேயு 4:23; லூக்கா 9:2,6,11). அவர் பிறந்த பொழுது, தேவதூதனின் செய்தி யாதெனில், *"கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்., அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது."*(லூக்கா 1:32,33). ஆபிரகாமின் சந்ததிகளுக்கு இங்கு ஒரு செய்தி: கிறிஸ்துவால் ஆளப்படும் ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் இராஜ்யம்.

தம்மைப் பின்பற்றுவோருக்கு ஜெயிக்கும்படி இயேசுவானவர் கற்றுக் கொடுத்தார். *"உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக"* (மத்தேயு 6:10), ஆபிரகாமைப்போல அதே

எதிர்பார்ப்போடு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். தம் போதனைகளோடு, இயேசுவானவர் அற்புதங்களையும் செய்தார். ராஜ்யம் எப்படியிருக்கும் என்பதை அவை எடுத்துக் காட்டின. குருடர் பார்வையடைந்தனர், செவிடர் கேட்டனர், முடவர் நடந்தனர், நோயுற்றோர் குணமாயினர், அவர் மரித்தோரை எழுப்பினார். வறியவர் நியாயமாய் நடத்தப்பட்டனர், பசியா யிருந்தவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. காற்றும் கடலும் அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிந்தன. மக்கள் எப்படி வாழவேண்டுமென அவருடைய போதனை கற்பித்தது. இது தீர்க்கதரிசிகளால் *முன்*னுரைக்கப்பட்ட ராஜ்யத்தைக் குறித்த முன்ருசி (அனுபவம்) (ஏசாயா 35; சங்கீதம் 37:11; 72; மீகா 4:1-4).

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்தவை.**

அதிசயமான இந்த ராஜ்யத்தில் என்றென்றும் வாழ, மரணத்தை மேற்கொள்ள வது அவசியம். மரணம் பாவத்திற்கான தண்டனையாகும். கிறிஸ்து ஒருவரைத் தவிர எல்லாருமே மரணத்துக்குப் பாத்திரர் (ஆதியாகமம் 3:17-19; ரோமர் 5:12). *“பாவத்தின் சம்பளம் மரணம்”* என்று கூறிய பவுல் மேலும், *“தேவனுடைய கிருபைவரமோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான நித்தியஜீவன்”* (ரோமர் 6:23) என்றும் கூறுகிறார். ஆகவே தான் இயேசுவும், *உங்கள் பிதா வாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்”* என்றார் (யோவான் 8:56). தேவனுடைய குமாரன் பாவமில்லாத தம் வாழ்க்கையினாலே மரணத்தை மேற்கொள்வதைச் சாத்தியமாக்கும் காலத்தைக் காண ஆபிரகாம் ஆவலாயிருந்தான். இயேசுவானவர் பாவத்தை நீக்க வந்தார் என்றும், அவருடைய தியாகபலியினால் நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றும் எபிரெயருக்கு எழுதின நிருபம் உறுதியளிக்கிறது (எபிரெயர் 9:11,12,26; 10:10). இயேசுவானவர் நமக்குப் பதிலாக மரிக்கவில்லை. ஆனால் அவருடைய தியாகபலியின் மூலமாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு, நாம் அழியாமையுள்ளவர்களாகவும் ஆக்கப்படுகிறோம் (1.கொரிந்தியர் 15:3-4, 20-23).

ராஜ்யத்தின் காரியங்களிலும் இயேசுவானவரின் கிரியைகளிலும் கொண்டுள்ள விசுவாசமே இரட்சிக்கிற இயேசுவின் நாமத்திலுண்டான திருமுழுக்குக்கு நேராய் நடத்துகிறது. (ரோமர் 6:1-6) திருமுழுக்கில் நாம் ஆபிரகாமோடும் அவன் விசுவாசத்தோடும் இணைக்கப்படுகிறோம் (கலாத்தியர் 3:26-29).

ஆகவே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிரசங்கிக்கப்பட்டு வரும் சுவிசேஷம், இயேசுகிறிஸ்துவால் பூமியின்மீது, ஆளப்படும் தேவனுடைய ராஜ்யத்திலே நித்தியஜீவனுக்குரிய நம்பிக்கையை ஆண்கள் பெண்களாகிய எல்லா மனிதருக்கும் அளிக்கிறது.



# தேவ ஏவுதலினால் அருளப்பட்ட வேதாகமம்




கிறிஸ்தடெல்ஃபியன் விசுவாசத்தின் அடித்தள ஆதாரமாகவுள்ள கொள்கையானது, தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமத்தின் பேரிலுள்ள முழுநம்பிக்கை அல்லது விசுவாசமே. தெய்வீக சொற்களாலாகிய வேதவாக்கியம் மிக முக்கியமான கோட்பாட்டை நமக்கு அளிக்கிறது. வேதாகமம் தெய்வீக வழிநடத்துதலால் (ஆதலால் தவறு ஏதும் இல்லாதது)எழுதப்படாவிட்டால், தேவனைப் பற்றிய அறிவும் மனிதரிடம் அவர் நடத்தும் கிரியைகளும் தரும் ஆதாரம் நம்புவதற்கேற்றதாக இல்லா திருந்திருக்கும்.வேதாகமம் தேவனிடமிருந்து வந்தது, தேவனே அதை எழுதுவற்கான காரணர் என்ற திட நம்பிக்கையோடு, வேதாகமத்தைத் தேவனுடைய அதிகாரப்பூர்வமான தேவ வார்த்தை என்று எடுத்துக் கொள்ளாவிடில், ஆவிக்குரிய காரியங்களிலும், இரட்சிப்புக்கு அடுத்த விஷயங்களிலும் அறிவு பெறுவதில் நாம் முன்னேற்றம் காண முடியாது. இதனால்தான் *‘ப்ர்மிங்ஹாம் திருத்திய விசுவாச அறிக்கை’* கீழ்க்கண்டவாறு கூறுகிறது: “மோசே, தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியோரின் வேதவாக்கியங்கள் அடங்கிய வேதாகமம் என்ற ழைக்கப்படுகிற புத்தகம் ஒன்று மட்டுமே தேவனையும், இப்போதும் இனிமேலும் உள்ள அவருடைய நோக்கங்களையும் குறித்த அறிவுக்கு மூலஆதார மாக இருக்கிறது. மேலும் இந்த வேதவாக்கியங்களை எழுதியவர் களுக்குள் இருந்த தேவ ஆவியனவரால் அருளப்பட்டதால், மூல வேதாகமத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தவறு ஏதும் இல்லை. மொழிபெயர்க்கும்போது தவறுகள் ஏற்பட்டுள்ளன (2.தீமோ.. 3:16; 1.கொரி. 2:13; எபி. 1:1; 2.பேது. 1:21;1 கொரி. 14:37; நெகே. 9:30; யோ. 10:35).

தேவ ஆவியானவரால் உந்தப்பட்டு எழுதப்பட்ட வேதவாக்கியங்களின் முக்கிய அம்சங்கள்:

**1.** தேவனுடைய ஆவியின் மூலமாய் வேதாகமம் உண்டாக்கப்பட்டது. 2.தீமோத்தேயு 3:16: *"வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது".*

**2.** தேவனுடைய ஆவியானவர் தமது தாசரான மனிதர் எழுதும்படி வழிநடத்தினார், ஏவினார். 2.பேதுரு 1:20-21 *"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடைதா யிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."*

**3.** இப்படி பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு வேதாகமத்தை எழுதினவர்கள் தேவனுடைய தெய்வீக அதிகாரத்தினாலே எழுதினார்கள். அவர்களுடைய வார்த்தைகள் தேவனுடைய மக்களைக் கட்டுப்படுத்துகின்றன. 1.கொரிந்தியர் 2:12,13 *"நாங்களோ ...தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளாலே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்."* 1.கொரிந்தியர் 14:37 *"...நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள்"* யோவான் 10:35 *"வேதவாக்கியம் தவறாததாயிருக்கிறது"* என்று இயேசுவானவர் கூறினார்.

**4.** வேதாகமம் ஏவப்பட்டு எழுதப்படுவதில் பயன்படுத்தப்படும் வார்த்தை கள் மீது தெய்வீக கட்டுப்பாடு அல்லது தெய்வீக மேலாண்மை செயல் படுகிறது. எண்ணாகமம் 22:38; 23:3,5: *"...தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்"* பின்பு பிலேயாம் பாலாக்கை நோக்கி *"...அவர் எனக்கு வெளிப்படுத்துவதை உமக்கு அறிவிப்பேன். ...கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளினார்."* 2.சாமுவேல் 23:1-3: *"தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்: கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது. இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது:"* எரேமியா 1:7,9: *"ஆனாலும் கர்த்தர்: '...நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை யெல்லாம் நீ பேசுவாயாக. ...இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்.'"* யோவான் 14:10,24: *"...நான் (இயேசு) உங்களுக்குச் சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. ...நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதா யிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாய் இருக்கிறது".*



**5.** வேதவாக்கியங்கள் யாவும் தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டிருப்ப தால் வேதத்தில் தவறு நிகழும் வாய்ப்பே இல்லை. சங்கீதம் 12:6: *"கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாய் இருக்கிறது.*

**6.** நமக்கு அறிவு புகட்டவும், நம்மை மாற்றவும், ரட்சிக்கவும் தேவனுடைய ஆவியானவரின் வல்லமை வேதவாக்கியங்களில் உள்ளன. அதை இன்னும் தெளிவாக்க, மேலும் தேவஆவியானவரின் செயல் தேவையில்லை. *"பரிசுத்த வேத எழுத்துக்கள் உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க* [கிரேக்கு பாஷெயில் 'டுனாமி = சக்தி பெற்ற]...*"* (2. தீமோத்தேயு 3:15). *"நான் உங்களுக்குச் சொல்லுகின்ற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."* (யோவான் 6:63): *"...இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தி யடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்."* (அப்போஸ்தலர் 20:32). *"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."* (ரோமர் 10:17). ஏசாயா 55:11.

**"வேதாகமம் (பைபில்) அதை ஆக்கியோரின் கரங்களிலிருந்து வந்த பொழுது இருந்தது போலவே, இன்றும் புதுமை மங்காமல் நமக்கு வெளிச்சமும் ஜீவனுமாயிருக்கிறது. நாம் நமது ஜீவனை விலைமதிப்பது போலவே, வேதவாக்கியங்களின் அதிகாரம் அல்லது முக்கியத்துவத்தை விட்டு நம்மை திசைதிருப்பக்கூடிய எல்லாக் கோட்பாடுகளுக்கும் எதிராக, சற்றும் அசையாதவர்களாக நம் தீர்மானத்தில் உறுதியாய் நிற்போமாக."**

# என்னத்தை உண்போம்? - விடுதலை ஆண்டு தரும் பாடங்கள்

இரு இடங்களில், மத்தேயு 6:25; லூக்கா 12:22-32 உணவையும் உடையையும் குறித்துக் 'கவலைப்படாதிருங்கள்' என்பது எதிர்காலத்தைக் குறித்துக் கவலையீனமாயிருக்க வேண்டுமென அறிவு புகட்டுவது என்பதல்ல இது. தேவன் இஸ்ரவேலருக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருப்பவைகளைப் பற்றி, அவர்கள் ஏன் நம்பிக்கை கொள்ள வேண்டும் என இயேசு அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். யூபிலி ஆண்டில் தேவன் ஆயத்தம் பண்ணி வழங்கிய சம்பவங்களைத் தமது கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்.

விடுதலை ஆண்டு (ஏழாம் ஆண்டு - ஓய்வின் ஆண்டு) மற்றும் யூபிலி குறித்துக் கூறப்பட்ட கட்டளைகளைக் கவனியுங்கள்:

*"பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு, அதில் சுகமாய் குடியிருப்பீர்கள். ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்க வேண்டுமே? என்று சொல்வீர் களானால், நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுவேன். அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத் தரும்"* (லேவியராகமம் 25:19-21)



ஓய்வு ஆண்டு எனும் ஏழாம் ஆண்டிலும், யூபிலியிலும் இஸ்ரவேலுக்குத் தேவையானதை எல்லாம் தேவனே வழங்குவார் என்பது வாக்குத்தத்தம். ஆறாவது ஆண்டில் அறுவடையைத் தேவன் எந்த அளவுக்கு ஆசீர்வதிப்பார் என்றால், ஏழாம் எட்டாம் ஆண்டுகளில் தேவைப்படும் உணவனைத்தும் ஆறாவது ஆண்டில் தேவன்



வழங்குவார். ஆகவே ஓய்வு ஆண்டிலும் யூபிலி ஆண்டிலும் துவக்கத்திலேயே இஸ்ரவேலரின் சேமிப்புக் கிடங்குகளில் இருப்பதைக் கண்டு தேவன்மீது நம்பிக்கை வைப்பர்.

நம்பிக்கை என்பது தன் எதிர்காலத் தேவைகளைக் குறித்துக் கவலையே இல்லாமல் ஓய்வு ஆண்டில் இருப்பது என்பதாகாது. மாறாக, வாழ்க்கைக்கான பொருளாதாரங்களைக் குறித்துக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லாததால், தன் முழு கவனத்தையும் தேவன் எவ்விதம் தன் தேவைகளை சந்திக்கப் போகிறார் என்பதில் செலுத்தலாம்.- ஏனெனில் அவனுடைய தேவன் ஏற்கனவே அப்பொருட்களை வழங்கிவிட்டார். அதற்கான ஆதாரத்தைச் களஞ்சியங் களில் காணலாம்.

மலைப் பிரசங்கத்தில் இயேசுவான வர் கூறுவதாவது:

*"ஆகையால் என்னத்தை உண் போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலை படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தை பார்க் கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பறவைகளை கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை; அறுக்கிறது மில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகி றார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?* (மத்தேயு 6:25,26).

*"ஆகையால் என்னத்தை உண் போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்"* (மத்தேயு 6:31).

லேவியராகமம் 25.ல் கூறப்பட்டவைகளை மூன்றுமுறை இயேசு பயன் படுத்துகிறார்:

மத்தேயு 6:25 *"என்னத்தை உண்போம் என்று கவலைப்படாதிருங்கள்"* லேவியராகமம் 25:20.

மத்தேயு 6:26 *"விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை"* லேவியராகமம் 25:20

மத்தேயு 6:31 *"என்னத்தை உண்போம்"* லேவியராகமம் 25:20.

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட இஸ்ரவேலன் ஓய்ந்திருக்கும் ஆண்டை யும் யூபிலியையும் நினைவுகூர்ந்து, களஞ்சியத்தில் ஏழாம், எட்டாம் ஆண்டுக ளுக்கான உணவு ஏற்கனவே இருக்கும் ஆதாரத்தைச் சார்ந்திருப்பான்.



ஆகவே உணவு ஏற்கனவே இருக்கிறது என்பதால் *‘கவலைப்படாதிருங்கள்’* எனும் கூற்று அவனை உற்சாகப்படுத்தும் வார்த்தையாயிருந்தது.

இருப்பினும; இப்பாடத்தை ஓய்ந்திருக்கும் ஆண்டுக்கு மட்டுமல்ல, அதற்கு யூபிலிக்கும் மேலும் பயன்படுத்தும்படி இயேசு கூறுவதை கேளுங்கள்:

*“ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப் பூட்டுகிறார்.* (மத்தேயு 6:26)

ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிப்பது ஓய்வுஆண்டு மற்றும் யூபிலிக்கு மேற் பட்ட காலத்திற்கும் நீடித்தது. பறவைகள் ஒருபோதும் விதைக்காவிட்டாலும், அறுக்காவிட்டாலும் களஞ்சியத்தில் சேர்த்து வைக்காவிட்டாலும், தேவன் எப்போதும் அவைகளைப் பிழைப்பூட்டுகிறார். ஆகவே, ஓய்வு ஆண்டிலும் யூபிலியிலும் போஷிக்கப்படும் கொள்கையை சீஷர்களின் எல்லாக் காரியங்களுக்கும் காலங்களுக்கும் பொருந்துமென இயேசு காண்பிக்கிறார். ஆகவே *“நீதிமான் கைவிடப் பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை”* (சங்கீதம் 37:25) என சங்கீதக்காரனோடு கூட இயேசுவின் சீஷனும் மனதாரக் கூறவேண்டும்.

அஞ்ஞானிகளைச் சூழ்ந்திருக்கும் கவலையினின்று இயேசுவின் சீஷன் விடுதலையாகி *‘முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடக்கூடிய”* (மத்தேயு 6:33) நிலையிலிருக்கிறான்.

லூக்கா 12.ல் சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகள் மலைப்பிரசங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இங்கே “கவலைப் படாதிருங்கள்” என சீஷர்களுக்குக் கூறுமுன், தம் கருத்தை ஒரு உவமையின் மூலம் லூக்கா 12:16-21-*ல்* கூறுகிறார்.



**வ-16..** *”அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். ஐசுவரிய முள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.*

**வ-17..** *அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே;*

**வ-18..***நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து,*

**வ-19..** *பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்.*

**வ-20..** *தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?* என்றார்.”

ஓய்ந்திருக்கும் ஆண்டு மற்றும் யூபிலியைக் கருத்தில் கொண்டால் *“ஐசுவரிய முள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது”* என்பதையும், இந்த சந்தர்ப்பத்தில், அவன் *“என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாக கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைப்பேன்”* எனக் கூறுவதையும் புரிந்து கொள்கிறோம். ‘அநேகம் பொருள்களோ’ *‘பெரிதாக கட்டிய களஞ்சியங்களோ’* அவனது பிரச்சனை யில்லை. தனக்குக் கொடுக்கப்பட்டவைள் எல்லாம் தன் தேவனுக்கு ஊழியம் செய்ய அளிக்கப்பட்ட தருணங்கள் என அவன் பார்க்காதது தான் பிரச்சனை *“ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பா யிரு”* “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடும்” எண்ணம் அவனுக்கு இருக்கவில்லை.

*‘புசித்துக் குடித்து பூரிப்பாயிரு’* என்று இயேசு சொல்லும்போது, எசேக்கியா ராஜாவின் நாட்களில் இருந்த மக்கள், அசீரியர்கள் எருசலேமைச் சுற்றி வளைத்தபோது, தேவன்மீது நம்பிக்கை வைக்காமல் தங்கள்மீது தான் நம்பிக்கை வத்தார்கள் என்பதை நினைவுகூர்ந்தார். அவர்கள் எண்ண மெல்லாம் *“புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்”* என்பது தான் (ஏசாயா 22:13).

இந்தப் பின்னணியத்தைக் கொண்டு தான் லூக்கா 12-ல் இயேசுவானவர், *“உங்கள் ஜீவனுக்காகக் கவலைப்படாதிருங்கள்”* (லூக்கா 12:22) என கூறுகிறார் *“ஐசுவரியமுள்ள ஒருவன்”* ஓய்ந்திருக்கும்

ஆண்டிலும் யூபிலியிலும் வழங்கப் பட்டவற்றைத் தவறாகப் பயன்படுத்தினான்.

உண்மையில், ஒய்ந்திருக்கும் ஆண்டிலும், யூபிலியிலும் இஸ்ரவேலன் ஆதாமின் சாபத்தின்படி வாழவேண்டியிருக்கவில்லை. *“உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்”* (ஆதியாகமம் 3:19). தன் வயலில் வேலை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டிருந்தான். (லேவியராகமம் 25:4).

இந்தக் காலம் இஸ்ரவேலன் ஏதேனின் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, நாம் எதிர்பார்த்திருக்கும் ராஜ்யத்திற்கு அடையாளமான “தேவனுடைய பரதீசில்” இருப்பது போன்று இருக்கலாம். *“ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்”* (வெளிப்படுத்தல் 2:7).

இயேசுவானவர் தம்மைப் பின்பற்றியவர்களிடமும் நம்மிடமும் *“பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமா யிருக்கிறார்”* (லூக்கா 12:32) என்கிறார். ராஜ்யத்தைக் கொடுக்க அவர் பிரியமாயிருக்கும்போது, அப்பத்திற்காக இரந்து நிற்பவர்களாக நாம் ஒரு போதும் காணப்படாமலிருப்பது நம் கடமை. அதை தேவன் பார்த்துக் கொள்வார். அப்போது அஞ்ஞானிகளின் கவலையிலிருந்து, விடுதலை பெற்றவர்களாய், பிதாவை நாம் சேவிக்கக் கூடியவர்களாயிருப்போம்.

- பீற்றர் ஃபோர்பிஸ

# ஆபிரகாம் பெற்ற தேவ வாக்குத்தத்தங்கள்

பூமியிலுள்ள ஜனங்களுக்கென்று தேவன் வைத்திருக்கும் திட்டம் எது? இரட்சிப்புக்கு விசுவாசம் ஏன் போதுமானது? ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் தேவன் தந்த வாக்குத்தத்தங்கள் வேதாகமத்திலுள்ள பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை விளங்கிகொள்ள ஏதுவாக இருக்கின்றன. தேவ ஜனங்களுக்கென்று அவருடைய திட்டத்தைப் புரிந்துக்கொள்ள அது மிகவும் அவசியமானதாக இருக்கிறது.



**<u>கவன ஈர்ப்பு:</u> அப்போஸ்தலர் 26:1-23**

இந்தக் காட்சியைச் சற்று கற்பனை செய்து பாருங்கள். நவீன வசதிகளைக் கொண்ட செசரியா பட்டணத்தில், ஒரு நீதிமன்றம் இயங்குகிறது. அங்கு தர்சு பட்டணத்தானான பவுல் விசாரணை செய்யப்படுகிறான்...

எருசலேமிலுள்ள யூதமதத் தலைவர்கள் அவனைக் கொன்றுபோடத் தீவிரமா யிருக்கிறார்கள். அகரிப்பா ராஜா, அவனது மனைவி பெர்னிக்கே மற்றும் பட்டணத்தின் கனவான்கள் கூடிவந்து பவுல் தனது பிரதிவாதத்தைச் சொல்ல கேட்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பவுல், அகரிப்பாவைப் புகழ்ந்து, தனது பேச்சை ஆரம்பிக்கிறான்:

*“யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக் குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப் போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன். விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன்”.* (அப்போஸ்தலர்: 26:2-3).

பவுலின் ஜீவன் ஆபத்திலுள்ளது. எனவே, யூதர்கள் தன்னைக் கொலைசெய்யத் தேடும் முகாந்தரத்தைத் தெளிவாக அவன் எடுத்துக் கூறவேண்டும். தான் நீதிவிசாரணைக்குட்படும் காரணத்தை இரண்டு வரிகளில் கூறுகிறான்:

*“தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்கிற நம்பிக்கைக்காக நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன்”* (அப்போஸ்தலர் 26:6).

இந்த வாக்குத்தத்தங்கள் பவுலின் விசாரணையில் மிகமுக்கியமானவைகள். இந்த வாக்குத்தத்தங்கள் இன்றும் மிகமுக்கியமே. நமது ஜீவியமே அதை நம்பித்தான் இருக்கிறது. இந்த வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவத்தை அறியும்படிக்கு நாம் ஆதியாகமத்துக்கு சென்று, அதில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குத் தேவன் என்ன வாக்களித்தார் என்று காணவேண்டும்.

சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்னர், மனுக்குலத்துக் கென்று தேவன் வைத்திருந்த இரட்சிப்பின் திட்டத்தை தொடர்ச்சியான வாக்குத்தத்தங்களின் மூலம் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார். இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவ்வளவு ஆண்டு காலத்துக்கு முன்னர் கொடுக்கப்பட்டிருந்தும் அவைகள் அனைத்து விசுவாசி களுக்கும்



ஆதாரமானது. பின்குறிப்பிட்ட வேதவசனங்களை உங்கள் வேதாகமத்தில் கோடிட்டு மனனம் பண்ண உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.. ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் வாசித்து, அதன்பின் வரும் கேள்வியின் அடிப்படையில் தியானியுங்கள்.

**1.** ஆதியாகமம் 12:1-3 ஆபிரகாமின் சந்ததி ஒரு பெரிய ஜாதியாகி, சகல ஜாதிகளும் அவன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் வாக்களித்தார்.

A. ஆபிரகாம் எந்த ஜாதி தேசத்தான்?

B. தேவன் செய்யச் சொன்னதை அவன் ஏன் நிறைவேற்றினான்?

C. "பூமியிலுள்ள சகல ஜாதிகளும் உன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்ற வாக்குத்தத்தத்தின் அர்த்தம் என்னவாக இருக்கும்?

D. இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறிவிட்டனவா?

**2.** ஆதியாகமம் 13:14-17. தேவன் ஆபிராமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் ஒரு தேசத்தை வாக்குபண்ணினார்.

அ. ஆபிராம் அந்த தேசத்தை எப்போது பெற்றான்?

ஆ. ஆபிராமின் சந்ததி யார்? (சரியாக யோசியுங்கள், பல குழுக்குள் உள்ளன).

**3.** ஆதியாகமம் 15:5-6. ஆபிராமுக்குத் திரளான சந்ததியார் வாக்குப் பண்ணப்பட்டனர்.

அ. ஏன் தேவன் ஆபிராமை நீதிமான் என்று கருதினார்? (நீதிமான் என்றால் அர்த்தம் என்ன?) ரோமர் 4:1-5. காண்க.

ஆ. இது ஏன் உனக்குத் தனிப்பட்ட முறையில் முக்கியமானது?

**4.** ஆதியாகமம் 15:17:21. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் விளக்கப்பட்டுள்ளது.

அ. அதை ஒரு உலக வரைபடத்தில் காண்க. வேதாகம வரைபடத்துடன் இன்றைய உலக வரைபடத்துடன் ஒப்பிட்டு அதன் பரப்பளவைக் காண்க.



ஆ. உடன்படிக்கை" (வச.18) என்ற பதத்தின் அர்த்தம் என்ன?

**5.** ஆதியாகமம் 17:3-8, 15-22. ஆபிரகாம் மற்றும் சாராளின் வாக்குத்தத்த புத்திரனாகிய ஈசாக்கு ஆபிரகாமின் உண்மையான வித்தாக இருப்பான். தேவன் தமது வாக்குத்தத்தத்தை அந்த மகன் மூலமாக நிறைவேற்றுவார்.

அ. பின்வரும் வார்த்தைகளின் அர்த்தம் என்ன?

**i)** ஆபிராம் மற்றும் ஆபிரகாம்

**ii)** பரதேசி

**iii)** ஈசாக்கு (குறிப்பு: ஆதியாகமம் 17:17)

ஆ. வாக்குத்தத்தம் இஸ்மவேலின் மூலமாக அல்லாது, ஈசாக்கின் மூலம் செல்லவேண்டும் என்று தேவன் ஏன் கூறினார்?

இ. நவீன இஸ்ரவேலர் சமாதானம் என்கிற பெயரில் தங்கள் தேசத்தை அரபியருக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமா? மொத்தத்தில், ஆபிரகாமுக்குக் கிடைத்த வாக்குத்தத்தத்தின்படியே

A. பெரிய எண்ணிக்கையான சந்ததி அவனுக்கு உண்டாயிருக்கும்.

B. எல்லா ஜாதியாரும் அவன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

C. அவனுக்கும் அவன் சந்ததிக்கும் ஒரு தேசம் என்றென்றும சுதந்திரமாகக் கொடுக்கப்படும்.

## ஆபிரகாம் குடும்ப மரம்

ஆ

பி →இஸ்மவேல்

ர →ஈசாக்கு →ஏசா

கா **→யாக்கோபு→12 கோத்திரம்→தாவீது→**

ம் **→தாவீது→சாலொமோன்→இயேசு**

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் ஈசாக்கு, 90 வயதான சாராளுக்குப் பிறந்தபோது அவன் 100 வயதுள்ளவனாக இருந்தான். (ஆதியாக மம் 17:17; 21:5) முப்பத்தேழு ஆண்டுகள் சென்று சாராள் மரித்து எபிரோனிலுள்ள மக்பேலா குகையில் அடக்கஞ் செய்யப்பட்டாள். ஆபிரகாம் அந்த நிலத்தை (தேவனால் சுதந்திர பூமியாக வாக்குப்பண்ணப்பட்டிருந்தும்) விலை கொடுத்து வாங்கினான் (ஆதியாகமம் 23:1, 19-20.). பின்பு ஆபிரகாம் (175 வயதில்) மரித்து, சாராளோடு அந்தக் குகையில் அவனுடைய குமாரரால் அடக்கம் பண்ணப்பட்டான்.

ஆபிரகாமும் சாராளும் தங்களுடைய ஜீவியகாலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்கவில்லை.

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் ஈசாக்குக்கும், ஈசாக்கின் மகன் யாக்கோபு(இஸ்ரவேல்)க்கும், யாக்கோபின் பனிரெண்டு புத்திரருக்கும், படிப்படியாக தாவீது ராஜாவுக்கும் என 1,000 ஆண்டுகள் கடந்து சென்றன.

தேவன் ஒரு குறிப்பிட்ட வீட்டைக் குறித்துப் பேசாமல், தாவீதுக்குப் பின் தொடரும் ராஜரீக வம்சம்பற்றி, பேசினார். இந்தக் குடும்பம் ஆபிரகாமுக்குத் தேவன் தந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, ஒரு சந்ததியை உருவாக்கினது. தாவீதின் “சந்ததி”பற்றிய வாக்குத்தத்தங்கள் அவனுடைய குமாரனாகிய சாலொமோனில் ஓரளவு நிறைவேறினது.

## உனக்குத் தேவனுடைய வாக்குத்தத்தம்!

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில், “முற்பிதாக்களின் நம்பிக்கை”யினிமித்தம் விசாணைக்குட்பட்ட பவுலை பற்றி படித்தோம். இந்த “நம்பிக்கை” கலாத்தியர் 3.ம் அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஆபிரகாமைக் கவனித்துப் பாருங்கள்: “அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது” ஆகையால், விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னதாகக் கண்டு, “உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. அந்தப்படி விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக் கப்படுகிறார்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததி யாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்” (கலாத்தியர் 3:6-9, 29),

பவுல் விசுவாசத்தினால் அதைப் புரிந்துகொண்டான்: யூதரும் யூதரல்லாதவர்களும் “ஆபிரகாமின் பிள்ளைகள்” ஆகமுடியும் என்றும், வாக்குத்தத்தங்களைப் பெறமுடியும் என்றும், அதன் ஒரு பகுதியை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்தில் பெறலாம் என்றும் அறிந்திருந்தான்.

நாமும் பவுலின் மாதிரியைப் பின்பற்றி, தேவன் தந்த வாக்குத்தத்தங்களை நம்பி, விசுவாசத்தோடிருந்தால், நாமும் தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனாகிய வாக்குத்தத்தத்தை எதிர்பார்க்கக்கூடும்.



## சில பொருத்தமான வேதபகுதிகள்

**ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்:** ஆதியாகமம் 12:1-4; 13:14-17; 15:5-6, 17-21; 17:3-8, 15-22; 18:18-19; 22:15-18.

**ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் வாக்குத்தத்தம்:** ஆதியாகமம் 26:3-4; 28:13-15; 35:11-12

**தாவீதுக்கு வாக்குத்தத்தம்:** 2.சாமுவேல் 7:4-29; 1.நாளாகமம் 17:4-27; 2..நாளாகமம் 6:1-10; எரேமியா 33:14-18.

**நமக்குப் பொருத்தமானது:** லூக்கா 13:28; அப்போஸ்தலர் 3:25-26; அப்போஸ்தலர் 13:32-34; 26:6; ரோமர் 4:16; 9:7-8; 15:8; கலாத்தியர் 3:7-29; 4:28; எபேசியர் 2:12-13; 2.பேதுரு 1:3-4.

**ஆபிரகாமின் பிள்ளைகள்:** லூக்கா 3:8; 19:9; யோவான் 8:39; ரோமர் 9:7-8; கலாத்தியர் 3:7, 27-29; 1.பேதுரு 3:6.

## சில பொருத்தமான வேதபகுதிகள்

**ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்:** ஆதியாகமம் 12:1-4; 13:14-17; 15:5-6, 17-21; 17:3-8, 15-22; 18:18-19; 22:15-18.

**ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் வாக்குத்தத்தம்:** ஆதியாகமம் 26:3-4; 28:13-15; 35:11-12

**தாவீதுக்கு வாக்குத்தத்தம்:** 2.சாமுவேல் 7:4-29; 1.நாளாகமம் 17:4-27; 2..நாளாகமம் 6:1-10; எரேமியா 33:14-18.

**நமக்குப் பொருத்தமானது:** லூக்கா 13:28; அப்போஸ்தலர் 3:25-26; அப்போஸ்தலர் 13:32-34; 26:6; ரோமர் 4:16; 9:7-8; 15:8; கலாத்தியர் 3:7-29; 4:28; எபேசியர் 2:12-13; 2.பேதுரு 1:3-4.

**ஆபிரகாமின் பிள்ளைகள்:** லூக்கா 3:8; 19:9; யோவான் 8:39; ரோமர் 9:7-8; கலாத்தியர் 3:7, 27-29; 1.பேதுரு 3:6.

## கருப்பொருள்

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு மாபெரும் ஜாதி, திரளான சந்ததியார், எல்லா ஜாதிகளும் ஆபிரகாமில் ஆசீர்வதிக்கப்படுவர் என்ற வாக்குத்தத்தங்கள் கிடைத்தன.

தேவன் இந்த வாக்குத்தத்தங்களை தாவீதுக்கும் திரும்ப ஏற்படுத்தி, இயேசு கிறிஸ்துவைப் பற்றி சிறப்பான குறியீடுகளை நியமித்தார்.

இயேசுவைப் பின்பற்றுகிற அனைவருக்கும் வாக்குத்தத்தங்கள் உரிமையாகின்றன. இயேசுகிறிஸ்து இந்த உலகிற்குத் திரும்ப வந்து தமது ராஜ்யத்தை நிலைநிறுத்துவார் என்று அவர்கள் காத்திருக்கின்றனர்.